# இறையருள்
# IRAI ARUL

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY

**Volume 20 No : 1** **JANUARY 2016**



## *Editorial Board*

*Patron*

**His Excellency**

**Mar George Rajendran SDB**

*Chief Editor*

**Fr. Joseph Santhosh**

*Executive Editor*

**Mr. Soundara Raj**

*Associate Editors*

**Fr. K.J. Antony SDB**

**Mr. Edwinson**

**Mr. Berlin Athencod**



Published by

**Fr. Joseph Santhosh**

**Bishop's House**

**Post Box No . 12**

**Thuckalay - 629 175**

**K.K.Dist,Tamil Nadu,India.**

Printed at

**Pulari Offset Press**

**Thuckalay.**

**Ph:04651-252570**


## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 2 |
| உயர் பேராயர் மடல் | 8 |
| அல்போன்சா கல்லூரி | 20 |
| Birthdays and Feastdays | 22 |
| நற்செய்தி நிலையம் | 23 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 26 |
| இளையோர் இயக்கம் | 30 |
| வின்சென்ட் தே பவுல் | 31 |
| Mission Sunday Collection | 36 |
| செங்கோட்டை செய்திகள் | 37 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 38 |
| Bishop's Engagements | 40 |

# BISHOP'S MESSAGE

**Dear Fathers and Brothers,**

Greetings from the Bishop's House!

Wishing you MERRY CHRISTMAS AND HAPPY NEW YEAR 2016. I am sure you had a meaningful Christmas celebration in your parish.

**NEWS AND EVENTS**

**a. Diocesan Bible Convention cum Religious Year Exhibition**

As we had planned the Diocesan Bible Convention cum Religious Year Exhibition was held on 4th, 5th, and 6th of December 2015 at Sacred Heart Church, Padanthalummood. The team from Potta was there to animate us. I thank in a special way Rev. Fr. Raphael VC and his team for giving us spirit-filled talks. I also thank the animators of the retreat for the Kuzhanthai Iso Iyakkam children.

I am grateful to our VG Rev. Fr. Jose Muttathupadam, Rev. Fr. Joseph Nedumpuram and his Vanthuparungal team, Rev. Fr. Robins Kuzhikodil, Rev. Fr. Prince Maliyil, and Rev. Fr. Kochumon and the parish team for arranging the venue and making it convenient for the retreatants to participate effectively. Special thanks to Fr. Jomon Mangalamadathil and Kuzhanthai Iso Iyakkam team for organizing the children's retreat. In a special way I would like to mention Rev. Fr. Felix SDB and his team for organizing the Religious Year exhibition for the catechism children. It was wonderful to see the various types of creative exhibits presenting particular charisms of the religious institutes. I believe many of our children were inspired and hope that many of them will heed to their call to religious life.

Thanks to Rev. Fr. Seby and Rev. Fr. Linslal who made a wonderful presentation about the vocation of the Diocesan priests.

It was encouraging to see many children participate in the retreat as well as visit the exhibition. I thank the parish priests, sisters and lay teachers who encouraged their faithful and children to take part in the Bible convention and in the Exhibition.

**b. Year of Mercy Inauguration**

The inauguration of the Year of Mercy was held on 8th December in Padanthalummood. There were quite many lay men and women representatives besides the fathers present for the inauguration. I thank all the sisters who participated and many of whom made it a point to be present as community and some from even faraway places.

My special thanks goes to Rev. Fr. Toji the Coordinator and his team for organizing the event and for getting ready the materials. On 13th all of our parishes organized a Parish-level celebration of the Inauguration of the Year of Mercy. Thank you dear fathers for your cooperation and interest to lead our people this coming year to a deep experience of God's mercy.

I request all the parishes and pious associations to implement the plans for the year of mercy with zest, and profit from this beautiful year of grace bestowed upon us by our mother the church.

We have declared three of our parishes as pilgrim centres during this year of Mercy: Alphonsa Church, Nagercoil, St. George Church, Munchirai, Sacred Heart church, Padanthalummoodu. The HOLY DOOR of these churches will be kept open. Kindly encourage everyone to make pilgrimage to receive grace and blessing.

**For receiving a plenary indulgence**: Enter the holy door that is designated. It is necessary that the faithful be in the state of grace at least at the time the indulgenced work is completed. A plenary

indulgence can be gained only once a day. In order to obtain it, the faithful must, in addition to being in the state of grace:

a. have the interior disposition of complete detachment from sin, even venial sin;

b. have sacramentally confessed their sins;

c. receive the Holy Eucharist (it is certainly better to receive it while participating in Holy Mass, but for the indulgence only Holy Communion is required); and pray for the intentions of the Supreme Pontiff.

It is appropriate, but not necessary, that the sacramental Confession and especially Holy Communion and the prayer for the Pope's intentions take place on the same day that the indulgenced work is performed; but it is sufficient that these sacred rites and prayers be carried out within several days (about 20) before or after the indulgenced act. Prayer for the Pope's intentions is left to the choice of the faithful, but an Our Father and a Hail Mary are suggested. One sacramental Confession suffices for several plenary indulgences, but a separate Holy Communion and a separate prayer for the Holy Father's intentions are required for each plenary indulgence.

For the sake of those legitimately impeded, confessors can commute both the work prescribed and the conditions required (except, obviously, detachment from even venial sin).

Indulgences can always be applied either to oneself or to the souls of the deceased, but they cannot be applied to other persons living on earth. *Indulgence means the complete remission of all temporal punishment due to sin.*

**c. Pre-Christmas Gathering and Priests Conference**

On the 16th of this month the presbyterium gathered at Sangamam to celebrate in advance the Christmas joy, the birth of

our saviour. It was purely a family gathering. Glad to see every one too part in it with lots of enthusiasm and joy. Rev. Fr. Johnsilal, and his team with Rev. Fr. Seby had done a great job organizing the programs, the venue, packing gifts, and preparing lunch. I thank all the fathers and brothers who took pains to look into the details, for decorating the place and so on. Your sacrifice made the day.

**FORTHCOMING EVENTS**

**1. Celebration of Syro-Malabar mission week**

Our Syro-Malabar Church is celebrating the Syro-Malabar mission week in January. A pastoral Circular of our Major Archbishop is sent to you regarding the mission week. Syro-Malabar Mission Sunday is celebrated the following Sunday on 10th January and I again remind you dear fathers that a Special Collection for Syro-Malabar Mission has to be made on that day.

**2. Inauguration of the new College building**

Our college building of St. Alphonsa College of Arts & Science has had a steady progress in its construction. Through thick and thin God has helped us to stand in good stead. Today the institution stands in its own pride serving many poor people of our district.

I am glad to say that the Inauguration of the new College building will be held on January 17th. His Beatitude Cardinal George Alencherry will be the Chief Guest for the function and will join us in thanking God for enabling us to establish such a functional and beautiful edifice that will help in the education of many poor children. Rev. Fr. VG and Rev. Fr. Christudas will be meeting all the fathers Forane-wise to discuss in detail regarding the function and how to bring our faithful and students to the college. Let us all work together to make this event a beautiful

and impressive one and the prestige of our new college of our diocese needs to be well made-known in our district.

**3. Uraviam prayer books**

Kindly use the draft of the New Uraviam prayer book given to you for some trial runs this coming month. We can finalise the prayer book in our February meeting after we share our experiences.

**4. Fathers' picnic**

We have fixed the date for fathers' picnic on 3rd February 2016. Kindly block this date.

**5. Pastoral Calendar 2016**

Diocese level pastoral calendar is ready and is distributed along with this circular. Kindly give one copy each to all the department and pious associations in your parish. Based on this program may I encourage you to prepare your parish-level annual program. Also take note of the diocese-level program where we need your personal presence.

**6. Liturgical Calendar**

We have distributed the liturgical wall calendars to all the parishes.

**INFORMATION**

1. Br. John Joseph, was ordained deacon in the Satna seminary on 20th December. We congratulate and pray for him.
2. On February 13th a special seminar on *Laudato Si* will be conducted by an expert team from Thrissur. All the fathers including the religious, are requested to attend the seminar.

**CONCLUSION**

The Christmas story speaks of a just man Joseph who planned to quit being the father of the Son of God, because he

finds himself unworthy (as interpreted by St. Thomas Aquinas). Jerome and Origen would say Joseph would have no suspicion on Mary. Joseph is assured by the angel in his dream, "Don't be afraid." Joseph also does not want to expose Mary otherwise. In any case Joseph when reassured, commits himself to God's plan.

In the Kingdom of God, Dreams and Plans form an essential part. Dreams are not for achievements of pride and self-glory. Joseph's dream was an outcome of pondering God's plan in his life. He gives place to God's plan rather than that of his own. Today as priests our call is the same. This is our sacrifice. This is the way we are to be just in front of God. Our plans are meant for the Kingdom of God and not for self-glory.

We have planned much and consolidated them in our Pastoral plan even as we enter the New Year 2016. May we have dreams and plans for our people, for their welfare, and ultimately for the Kingdom of God. The reassuring God is with us all. We are fathers, yes foster fathers like St. Joseph.

I wish you all a Year filled with the Mercy of God and a year committed to God's plan.

Yours in Christ Jesus,
+George Rajendran SDB
Bishop of Thuckalay

---

## Pope Francis
## TWEETS



**Pope Francis** @Pontifex Nov 28
I have great hope for Africa, and for the harvest of grace that the Lord is preparing in your midst.

## உயர் பேராயரின் சுற்றுமடல்

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர், மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள், அனைத்து பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் குருக்களுக்கும் இருபால் துறவியருக்கும் பொதுநிலையினருக்கும் எழுதுவது.

இறை இயேசுவில் அன்பான சகோதரர் சகோதரிகளே,

சீரோ மலபார்த் திருச்சபையின் திருத்தொண்டு ஆர்வமானது உலகளவில் கண்கூடாகக் காணக்கிடக்கிறது. இத்தாயின் பிள்ளைகள் உலகின் பெரும்பான்மையான நாடுகளில் திருத்தொண்டுப் பணியாளர்களாக சேவைபுரிந்து வருகிறார்கள். இது, இத்தாய் தனக்குள்ளேக் கொண்டிருக்கும் ஆழமான ஆன்மீக வாழ்வின் பிரதிபலிப்பு என்பதே உண்மை. "இந்தியாவே உனது மீட்பு உன் மக்களாலேயே நிகழும்" என்னும் திருத்தந்தை பதிமூன்றாம் லியோ (பதிமூன்றாம் சிங்கராயர்) அவர்களின் வார்த்தைகள், சீரோ மலபார்த் திருச்சபையின் திருத்தொண்டு பணிகளின் தொடக்கத்திற்கான, ஒரு அழைப்புமணியாக இருந்ததாகக் கொள்ளலாம். உலகின் பல்வேறு பகுதிகளில் சேவைபுரியும் திருத்தொண்டுப்பணியாளர்களுள் பலர், *சிறுமலர் மிஷன்லீக்* இயக்கம், *CLC* இயக்கம் மற்றும் *பிரேஷித கேரளம்* என்னும் இதழ் ஆகியவற்றால் உந்துதல் பெற்றவர்கள் என்பது நம்மை மிகவும் பெருமிதம் கொள்ள வைக்கிறது.

ஆனால் இந்தத் திருத்தொண்டு ஆர்வம் இப்போது தொய்வை சந்தித்திருக்கிறது என்பதை நாம் ஏற்றாக வேண்டும். துறவற வாழ்வை ஏற்போரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இவ்வேளையில் திருத்தூதர் யோவானின் பின்வரும் வார்த்தைகள் நமது மனசாட்சியை சோதனை செய்ய அழைக்கிறது: "முதலில் உன்னிடம் விளங்கிய அன்பு இப்போது இல்லை. ஆகையால் நீ எந்நிலையிலிருந்து தவறி விழுந்து விட்டாய் என்பதை நினைத்துப்பார்; மனம்மாறு; முதலில் நீ செய்து வந்த செயல்களை இப்பொழுதும் செய்" (திவெ 2: 45).

நேரிய கிறிஸ்தவ வாழ்வில் ஏற்பட்டிருக்கும் பிறழ்வே திருத்தொண்டின் மீதான ஆர்வம் குறைவதற்கு காரணமாக கூற முடியும். இத்தருணத்தில், திருச்சபையின் திருத்தொண்டு ஆர்வத்தைக் குறித்த சரியான புரிதல் அவசியமாக்கப்படுகிறது. திருச்சபையின்

தலையாய கடமை திருத்தொண்டுப்பணி புரிதல் என்பதை திருச்சபை ஏடுகள் பலகட்டங்களில் அறிவுறுத்தியிருக்கின்றன (AG 12, 29, EN 14, RM 36). "உலகின் கடையெல்லைவரை", "உலகின் முடிவுவரை" நற்செய்தியை அறிவிப்பதற்கான அழைப்பைத் திருச்சபைத் தாய் பெற்றிருக்கிறாள். 2015 ஆம் ஆண்டு கூடிய, சீரோமலபார்த் திருச்சபையின் ஆயர்ப்பேரவையில் எடுத்தத் தீர்மானத்தின்படி, தெனகாத்திருநாளைத் தொடர்ந்து வரும், அதாவது ஜனவரி 6 முதல் 12 ஆம் தேதி வரையிலான, ஒரு வாரகாலமானது, சீரோமலபார் மிஷன் வாரமாக அனுசரிக்கப்படும்.

இந்த மிஷன் வாரத்தின் விருதுவாக்காக, "*திருத்தொண்டைக் குறித்து அறிவோம், திருத்தொண்டுப்பணியாளராய் மாறுவோம்*" (Know the Missions and be a Missionary) என்பது எடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், இந்த ஒரு வாரகாலத்தை, திருச்சபையில் உள்ள பல்வேறு திருத்தொண்டுப்பணிகளைக் குறித்து அறிந்து கொள்வதற்காகவும், திருத்தொண்டுப்பணிக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்தோருக்காக செபிப்பதற்காகவும், திருத்தொண்டுப் பணிகளுக்கான நிதியை திரட்டுவதற்காகவும் இறையழைத்தல்களை ஊக்குவிப்பதற்காகவும் பயன்படுத்துவோம். இந்த ஒரு வாரகாலம், அனைத்து திருச்சபை உறுப்பினர்களின் உள்ளங்களிலும் திருத்தொண்டு ஆர்வத்தை உருவாக்குவதற்கு ஏற்ற நாட்களாக மாறட்டும்! அதற்காக, நான் செபிப்பதோடு, வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

தெனகாத் திருநாளைத் தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்புக் காணிக்கை நாளாக அனுசரிப்போம். அனைத்து, குடும்பங்களும், நிறுவனங்களும், தங்களுடைய பொருளாதார வசதிக்கேற்ப, திருச்சபையின் திருத்தொண்டுப்பணிக்காக பொருளுதவி செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். பங்குகளில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும், நிறுவனங்களுக்கும் உறைகளை (கவர்) விநியோகம் செய்து, அவைகளை பங்களவில் சேகரித்து மறைமாவட்டம் வழியாக காக்கனாடு சீரோமலபார் தலைமைச் செயலகத்தில் இயங்கும் *மிஷன் சப்போர்ட்* அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன். இத்தொகையானது பல்வேறு மிஷன் மறைமாவட்டங்களின் தேவைகளுக்காக அனுப்பி வைக்கப்படும் என்பதை நான் உங்களுக்கு உறுதியாக கூறிக்கொள்கிறேன்.

*மிஷன் சப்போர்ட்* அலுவலகமானது பிற விபரங்களையும் பரிந்துரைகளையும் உங்களோடு பகிர்ந்து கொள்ளும். அவர்கள் தரும் பரிந்துரைகளை இயன்றவரை செயல்முறைப்படுத்தவும்.

'நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்' என்னும் திருத்தூதர் தோமாவின் வார்த்தைகள், திருத்தொண்டு ஆர்வத்தின் உச்சத்தை நமக்கு உணர்த்துகிறது. திருத்தூதர் மேற்கொண்ட, திருத்தொண்டுப் பயணமும், அவர் சிந்திய இரத்தமும் நமக்குள்ளும் திருதொண்டு ஆர்வம் பற்றி எரிய உந்துசக்திகளாக மாற நான் செபிக்கிறேன். தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

**+ ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி**

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர்

(காக்கனாடு மவுண்ட் செண்ட் தோமஸில் செயல்படும், சீரோ மலபார்த் திருச்சபையின் தலைமைச் செயலகத்திலிருந்து நவம்பர், 05, 2015 அன்று வெளியிட்டது.)

---

## Pope Francis
# TWEETS



**Pope Francis** @Pontifex 26 Dec 2015
Let us pray for Christians suffering persecution, often amid the shameful silence of so many.



**Pope Francis** @Pontifex 24 Dec 2015
God is in love with us. He becomes small to help us love him in return.



**Pope Francis** @Pontifex 19 Dec 2015
Mercy is the path uniting God with man, for it opens the heart to the hope of an eternal love (MV 2).



**Pope Francis** @Pontifex 14 Dec 2015
One goal for each day: to convey the tenderness of Christ to those who are most in need.

# உயர் பேராயரின் சுற்றுமடல்

காக்கனாடு மவுண்ட் சென்ட் தோமஸ்-இல் இடம் பெற்றுள்ள, உயர் பேராய தலைமைச் செயலகத்தில் வைத்து, 2015 முதல் ஆகஸ்ட் 17 முதல் 29 வரை நடைபெற்ற சீரோமலபார்த் திருச்சபையின் XXIII - வது ஆயர் பேரவையின் (2015) இரண்டாம் அமர்வின் இறுதியில், வெளியிடப்பட்ட சுற்றறிக்கை.

அன்பான குருக்களே, இருபால் துறவறத்தாரே, பொதுநிலையினரே,

இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 17 முதல் 29 வரை, மவுண்ட் சென்ட் தோமஸ்-இல் வைத்து நடைபெற்ற ஆயர் பேரவையின் போது, மேற்கொள்ளப்பட்ட விவாதங்கள் மற்றும் தீர்மானங்களின் சுருக்கமான பதிப்பை உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன். முதல் நாள் மதியம் வரையிலான நேரம் திருப்பலிக்காகவும், தனி செபத்திற்காகவும் ஒதுக்கப்பட்டது. பிற்பகல் அமர்வானது, பேரவை மேற்கொள்ள இருக்கும் விவாதப்பொருட்களின் மீதான கண்ணோட்டமாக அமைந்தது.

இப்பேரவை அமர்வில் நாற்பத்து ஆறு ஆயர்கள் பங்கேற்றனர்.

**மாண்டியா மறைமாவட்ட எல்லை விரிவாக்கமும், புது ஆயரின் நியமனமும்**

மாண்டியா மறைமாவட்டத்தின் புதிய ஆயராக மார் ஆண்டனி கரியில் அவர்கள் நியமிக்கப்பட்டதோடு, அம்மறைமாவட்டத்தின் எல்லை விரிவாக்கத்தைக் குறித்த அறிவிப்பும் வெளியிடப்பட்டது. புதிய ஆயர், அக்டோபர் 18 ஆம் தேதி மாண்டியா கத்தீட்ரலில் வைத்து அருட்பொழிவு பெற்றார். தற்போது, மாண்டியா மறைமாவட்டத்தின் எல்லையானது பாங்களூர் லத்தீன் மறைமாவட்ட எல்லைகளையும் உள்ளடக்கியதாய் விரிவடைந்துள்ளது. இதன் விளைவாக பாங்களூரின் ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த, ஆயிரக்கணக்கிலான சீரோமலபார் மக்கள் சொந்தத் திருச்சபையின் வழிபாடுகளிலும் மேய்ப்புப்பணிகளிலும் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

**மேய்ப்புப்பணியாளர்களும் நற்செய்தி அறிவித்தலுக்கான புது முன்னெடுப்புகளும்**

சீரோ மலபார்த் திருச்சபைக்காக தரப்பட்டுள்ள புது மண்டலங்களில் மேய்ப்புப்பணிகளை மேற்கொள்ள ஆர்வம் மிகுந்த

ஏராளமான குருக்கள் தேவைப்படுகின்றனர். அத்தோடு, திருத்தொண்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான சிறப்புப் பயிற்சியை குருமாணவர்களுக்கு அளிக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. அதற்கான தயாரிப்புகளை குரு இல்ல நாட்களிலேயே மேற்கொள்ள வேண்டும் என்று ஆயர் பேரவை, இத்தருணத்தில், வலியுறுத்துகிறது. கேரளா மறைமாவட்டங்களிலிருந்து 'திருத்தொண்டுக்கான இறையழைத்தல்கள்' உருவாக கவனமிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகவும் உள்ளது.

சாங்லி, ராஜ்கோட், சாகர் மற்றும் பெல்த்தங்காடி போன்ற திருத்தொண்டு மறைமாவட்டங்களை சந்திக்கும் பேறு எனக்கு வாய்த்தது. இதைப்போன்ற மறைமாவட்டங்களில் நடைபெறும் திருத்தொண்டுப்பணிகளைக் குறித்து, மிகவும் ஆர்வத்தோடு, ஆயர் பேரவையானது விவாதித்தது. அப்பகுதிகளில் நடைபெறும் பணிகளைக் குறித்த விபரங்கள் மக்களை சென்றடையும் விதமாக இதழ்கள் வெளியிடவும் பரிந்துரைக்கப்பட்டது. அத்தோடு, அம்மையங்களை ஆயர்கள் பார்வையிட வேண்டும்; அங்கே பணிபுரிபவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும்; அம்மையங்களில் மேம்பாட்டுக்காக உன்னிப்பாக செயல்பட வேண்டும், போன்றவை, பேரவையின் போது, விவாதிக்கப்பட்டன. சுருங்கக் கூறின், சீரோ மலபார்த்திருச்சபை செய்து வரும் திருத்தொண்டுப்பணிகளைக் குறித்து, ஆயர் பேரவையானது மிக்க ஆர்வத்தோடு விவாதித்தது.

**சமூக சேவைகள்**

மறைமாவட்டங்களும், துறவற சமூகங்களும் மேற்கொண்டுவரும் சமூகச் சேவைப் பணிகள் கணக்கிலடங்கா. ஆனால், இப்பணிகளைக் குறித்த செய்திகள், பெருமளவில் பொதுச்சமூகத்தைச் சென்றடவதில்லை. ஆகையால், நமது சபையில் நடைபெறும் பல்வேறு விதமான பணிகளை ஒரு மைய அமைப்பால் இணைத்து, அச்செய்திகளை பொதுவெளியில் பரவச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என, ஆயர் பேரவை தீர்மானித்துள்ளது.

**இறை இரக்கத்தின் புனித ஆண்டு**

திருத்தந்தை, பிரான்சிஸ் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள, இறை இரக்கத்தின் ஆண்டைய கொண்டாட்டங்களைக் குறித்த விபரங்களை உங்கள் கவனத்திற்கு தருகிறேன். சாதாரணமாக

நடைபெறும் கொண்டாட்டங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கொண்டாட்டமாக இறையிரக்கத்தின் ஆண்டு அமைய வேண்டும் என்று திருத்தந்தை விரும்புகிறார். தனிமனித வாழ்வும், தனிமனித உறவுகளும் முதன்மைப்படுத்தப்பட்டு, நீதியும் உண்மையும் நிறைந்த இரக்கத்தின் கொண்டாட்டமாக இது அமைய வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

இதன் அடிப்படையில் பேரவையும் பின்வரும் காரியங்களை இவ்விரக்கத்தின் ஆண்டில் மேற்கொள்ள அழைக்கிறது. ஒப்புரவு அருளடையாளத்தை இறைமக்கள் ஆர்வத்தோடு அணுக வேண்டும்; நமது நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு நியாயமான ஊதியம் கொடுக்க வேண்டும்; அத்தோடு, இறைமக்கள் தங்கள் வருவாயின் ஒரு பகுதியை, இரக்கச்செயல்களுக்காக ஒதுக்க வேண்டும். குறிப்பு: ஆயர் பேரவையின் ஒப்புதல் பெற்ற இறை இரக்கத்தின் ஆண்டு நிகழ்வுகளின் வரைமுறை தயாரிக்கப்பட்டுள்ளது.

**சாகும் தருவாயில் இருப்போருக்கான பணி**

சாகும் தருவாயில் இருப்போரையும் தீரா நோயால் வேதனையுறுவோரையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு மறைமாவட்டங்களுக்கு உண்டு. அதனால், அவர்களுக்கான புதிய மையங்கள் தொடங்கப்பட வேண்டும்.

**சில சிறப்பு நிகழ்வுகள்**

1. அர்ப்பண வாழ்வு ஆண்டு - பிப்ரவரி 2-ஆம் தேதி நிறைவு

ஒவ்வொரு மறைமாவட்டங்களும் அர்ப்பண வாழ்வு நிறைவு விழாவினை அனுசரிக்க வேண்டும். சீரோ மலபார் சபை முழுவதற்குமான ஒருமித்த கொண்டாட்டம் இருக்காது எனவும் ஆயர் பேரவை தீர்மானித்துள்ளது.

2. உயர் பேராயமாக உயர்த்தப்பட்டதன் வெள்ளிவிழா

சீரோமலபார் திருச்சபை உயர் பேராயமாக உயர்த்தப்பட்டதன் வெள்ளிவிழா 2016 ஆம் ஆண்டில் வரவிருக்கிறது. எப்படி கொண்டாட வேண்டும் என்பதைக் குறித்து, ஆயர்கள் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர். அவை குறித்த அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்.

3. புரொகூரா - சீரோ மலபார்த் திருச்சபைக்காக ரோம் நகரத்தில் ஒரு மையம்

ரோம் நகரத்தில் நடைபெறும் பல்வேறு விதமான பணிகளை ஒருங்கிணைக்கும் விதமாக ரோமில் ஒரு மையம் ஏற்படுத்த வேண்டும் என்பது ஒரு நீண்ட நாள் கனவாக இருந்தது. அது தற்போது நனவாகி இருக்கிறது. அருட்தந்தை ஸ்டீபன் செறப்பொணத்து அவர்கள் அம்மையத்தின் பொறுப்பை ஏற்றிருக்கிறார். இதன் வழியாக, ரோம் நகரத்தின் பல்வேறு பகுதிகளில் சிதறி வாழும் சீரோ மலபார்த்திருச்சபையைச் சார்ந்த மக்களுக்கான மேய்ப்புப்பணியானது செயலூக்கம் பெற்றுள்ளது.

4. உயர் பேராய கூட்டம் (Syro-Malabar Assembly)

சீரோமலபார் உயர் பேராய கூட்டமானது ஆகஸ்ட் மாதம் 26 முதல் 28 வரை, இரிஞ்ஞாலக்குடாவில், கொடகரா என்னும் இடத்தில் அமைந்துள்ள சகுர்தயா பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெறும். இதில் 475 உறுப்பினர்கள் பங்கேற்கிறார்கள். இதனுடைய மையக்கருத்து, **இன்றைய சவால்களுக்கான திருச்சபையின் பதில்** என்பதாகும். குடும்பம், எளிய வாழ்க்கை முறை, புலம்பெயர்தல் போன்ற கருத்துக்களும் விவாதத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும். இதற்கான தயாரிப்புகள் நடந்துகொண்டிருக்கிறது. இதர விபரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

**புலம்பெயர்ந்தோருக்கான மேய்ப்புப்பணி**

1. திருத்தூதுப் பார்வையாளரின் (Apostolic Visitor) செயல்பாடுகள்

இந்தியா முழுவதும் சிதறி வாழும் சீரோமலாபார் மக்களுக்கான மேய்ப்புப்பணிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ஆயர் மார் ரபேல் அவர்கள், அப்பணியை திறம்படச் செய்து வருகிறார். பலத் தடைகளை தாண்டி, கடுஞ்சிக்கல்களுக்கு முடிவும் காணப்பட்டிருக்கிறது. புலம்பெயர்ந்து வாழும் மக்களின் ஆன்மீகத்தேவைகளை பூர்த்திச்செய்ய தேவையான சூழல்கள் உருவாகிட, நாம் தொடர்ந்து செபிப்போம்.

2. ஆணையத்தின் பணிகள்

பேரவையின் கீழ் செயல்படும் ஆணையமும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் விளைவாக, மக்களை ஒருங்கிணைக்கும் பணியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இங்கிலாந்தில், லான்சஸ்டர் பகுதியில் இரு பங்குகள் நிர்ணயம் செய்து தரப்பட்டுள்ளன. ஆனால், மத்தியக் கிழக்கு நாடுகளில்

பெருந்தடைகள் உள்ளன. அத்தடைகளை கடப்பதற்கான முயற்சிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திருவழிபாடு சார்ந்த காரியங்கள்**

1. கோயில் அர்ச்சிப்பு மற்றும் ஆயர் உடன் இருக்கும் போது, குருவானவர் திருப்பலி நிறைவேற்றும் விதம், குறித்த நெறிமுறைகளுக்கு ஆயர் பேரவையில் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது.

2. மூன்றாம் அனாபரா (நெஸ்தோரியுஸ்) - இன் மலையாளப் பதிப்பானது ஆயர் பேரவையின் ஒப்புதல் பெற்றுள்ளது. மொழித்திருத்தம் முடிந்த பின், ஆயர் பேரவையின் அதிகாரபூர்வமான ஒப்புதலுக்காக வைக்கப்படும். அதன் பிறகு, ரோமின் ஒப்புதல் பெற்ற பிறகு பொதுப்பயன்பாட்டிற்காக வெளியிடப்படும்.

## சில அறிவிப்புகளும் தகவல்களும்

**1. திருமறைக்கல்வி நூல்**

புதுநன்மை பெறுவதற்காக பிள்ளைகளை தயார் செய்யும் விதமாக ஒரு திருமறைக்கல்வி நூலானது தயாரிக்கப்பட்டு வருகிறது. ஜனவரியில் நடக்கும் ஆயர் பேரவையின் போது வெளியிடக்கூடும்.

**2. திருவழிபாட்டுக் கொண்டாங்களுக்கான தயாரிப்பு குறித்த நூல்**

திருவழிபாடு மற்றும் மறைக்கல்வி ஆணையங்களின் மேற்பார்வையின் கீழ், **சீரோ மலபார்த் திருச்சபையின் வழிபாட்டுமுறை விசுவாசப்பயிற்சி** என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. திருப்பலியும், இதர அருளடையாளங்களிலும் இளைஞர்களுக்கும், பிள்ளைகளுக்கும் விளக்கிக்கூறவும், அதை எப்படி அனுபவமாக மாற்றலாம் என்பதைக் குறித்தும், பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளும் ஒரு கையேடாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதை அனைவரும் வாங்கிப் பயன் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**3. 'வைதிக ரத்னம்'**

திருச்சபைக்கு ஆற்றிய நீண்ட கால பணியைக் கருத்தில் கொண்டு, அருட்தந்தை செபாஸ்டின் துருத்தேல் MST அவர்களுக்கு *'வைதிகரத்னம்'* என்னும் பட்டம் கொடுத்து கவுரவிக்கப்பட்டது.

**4. அருட்சகோதரி மேரி லிட்டி LSDP அவர்களுக்கு LRC விருது**

சீரோ மலபார் ஆயர் பேரவையால் ஏற்படுத்தப்பட்ட LRC விருதானது, கைவிடப்பட்டோருக்காகவும் ஏழைகளுக்காகவும் பணிபுரியும் இறைபராமரிப்பின் எளிய சகோதரிகளின் (LSDP) நிறுவனர், அருட்சகோதரி மேரி லிட்டி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**5. சீரோ மலபார் கீதத்திற்கான விருது**

சீரோ மலபார் கீதம் தேர்ந்தெடுப்பதற்கான போட்டி நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களுக்கு LRC - ஆல் பரிசு வழங்கப்பட்டது.

**6. சென்ட் தோமஸ் காட்சியகத்தில் (St. Thomas Museum) சிலுவைகளின் சேகரிப்பு**

காஞ்ஞிரப்பள்ளி மறைமாவட்டத்தைச் சேர்ந்த், அருட்தந்தை ஜார்ஜ் ஆலுங்கல் அவர்கள், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து சேகரித்த திருச்சிலுவைகளின் சேகரிப்பை, சென்ட் தோமஸ் காட்சியக்திற்கு நன்கொடையாக அளித்தார். அவை பார்வைக்காக, காக்கனாடு சென்ட் தோமஸ் காட்சியகத்தில், வைக்கப்பட்டுள்ளன.

**7. அருட்தந்தை இம்மானுவேல் தெள்ளியில் CMI மறைவு**

சீரோ மலபார்த் திருச்சபையின் வழிபாட்டு முறைகளை புதுப்பிப்பதில் பெரும் பணி ஆற்றிய அருட்தந்தை இம்மானுவேல் தெள்ளியில் CMI அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள். இவர், சிரியக் மொழியில் புலமை பெற்றதோடு, சிரியக் அகராதியும் வெளியிட்டுள்ளார். அவர் மல்பான் (ஆசிரியர்) என்னும் பட்டப்பெயருக்கு உகந்தவர். அவரது பணிகளை நன்றியோடு நினைப்பதோடு, அவரது நித்திய இளைப்பாற்றிக்காகவும் செபிப்போம்.

**8. The Jesus Youth**

ஜீஸஸ் யூத் பக்த சபையின் செயல்பாடுகளுக்கான விதிமுறைகளை ஆயர் பேரவை தயாரித்துள்ளது. ஜீஸஸ் யூத் உறுப்பினர்களின் உள்ளங்களில், திருச்சபைத்தாயின் மீது ஆர்வம் ஏற்படுத்தவும் அதன் மரபுகளை அவர்கள் தன்வயப்படுத்தவும் இவ்விதிமுறைகள் உதவும்.

**9. தியான இல்லங்களுக்கான விதிமுறைகள்**

சீரோ மலபார்த்திருச்சபையின் கீழ் உள்ள தியான இல்லங்களுக்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றை

அனைத்து தியான இல்லங்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. விதிமுறைகள் விரைவில் கையேடாக வெளிவரும்.

## 10. குருமாணவர்களின் உருவாக்கம்

குருக்களின் உருவாக்கத்தின் வெவ்வேறு நிலைகளைக் குறித்து ஆயர் பேரவை விரிவாக விவாதித்தது. ஆயர் பேரவையின் கீழ், வடவாதூர், ஆலுவா, குன்னோத், மற்றும் சாத்னா ஆகிய இடங்களில், நான்கு குருத்துவ கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. குருக்களின் உருவாக்கத்தில் திருச்சபை மேலும் அதிகமாக தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழுக்கள், இக்கல்லூரிகளை சந்தித்து நிலைமைகளைக் குறித்து விரிவான ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். அவை மிகவும் பயனுள்ளவைகளாக உள்ளன. அவற்றின் அடிப்படையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும்.

## 11. விடுவிக்கப்பட்ட குருமாணவர்களின் மறுசேர்க்கை

கீழைத்திருச்சபைகளுக்கான அவையிலிருந்து கிடைக்கப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில், துறவற சபைகள் மற்றும் மறைமாவட்டங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட குருமாணவர்களின் மறுசேர்க்கை குறித்த ஒரு தீர்மானத்தை ஆயர் பேரவை நிறைவேற்றியுள்ளது. விடுவிக்கப்பட்ட மாணவர், பிற துறவறச் சமூகத்திலோ, மறைமாவட்டத்திலோ மறுபடியும் சேரவேண்டுமானால், துறவறச் சமூகத்தைச் சார்ந்தவரானால், அச்சமூகத்தின் தலைவரிடமிருந்தும், குருத்துக் கல்லூரி அதிபரிடமிருந்தும் கடிதம் பெற வேண்டும். அம்மாணவர், மறைமாவட்டத்தைச் சேர்ந்தவராயின், சம்மந்தப்பட்ட ஆயரிடமிருந்தும் குருத்துவ கல்லூரி அதிபரிடமிருந்தும் கடிதம் பெற வேண்டும்.

## 12. பொதுத்தொடர்பு அலுவலகத்திற்கு புதுக் குழு

அருட்தந்தை ஜிம்மி பூச்சக்காட்டு அவர்களின் தலைமையின் கீழ் ஐந்து உறுப்பினர் குழு பொதுத்தொடர்பு அலுவலத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுவரை இப்பணியை, செய்தித்தொடர்பாளர்

என்னும் முறையில் திறம்பட மேற்கொண்ட அருட்தந்தை போள் தேலக்காட்டு அவர்களை பெரிதும் பாராட்டுகிறேன்.

### 13. மேஜர் சுப்பீரியர்ஸ் கூட்டம்

சபையில் துறவறத்தார் மேற்கொள்ளும் பணிகளைக் குறித்து விவாதிக்க, ஆயர்கள் மற்றும் மேஜர் சுப்பீரியர்ஸ் கூட்டம் நடத்தப்பட்டது. இருபால் துறவறத்தார் புரியும் பணிகளை நன்றியோடு நினைப்போம். சபைக்கு பொருளாதார உதவி செய்யும் துறவறத்தாருக்கு நாம் நன்றி கடன்பட்டுள்ளோம். துறவறத்தார், குருக்கள், ஆயர்கள் ஆகியோரிடையே சுமுகமான உறவை நிலைநிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு இவர்களின் சேவை மிகவும் அவசியமாக இருக்கிறது. நமக்கிடையே ஏற்படும் சிறு சிக்கல்களை தீர்த்து ஒருமனத்தோடு முன் செல்வோம்.

### 14. தனித்து வாழும் பெண்கள்

திருமணமாகாமல் தனித்து வாழும் பெண்களைக் குறித்து ஆயர் பேரவை விவாதித்தது. கல்வி கற்று, வேலை செய்யும் சில பெண்கள் திருச்சபையின் ஒப்புதல் பெற்று இணைந்து வாழ விரும்புகிறார்கள். மற்றும் சிலர், தனியாக தங்களது வீடுகளில் வாழ விரும்புவதோடு, இடையிடேயே ஒன்றாக கூடி செபிக்கவும் தியானங்கள் மேற்கொள்ளவும் விரும்புகிறார்கள். ஆனால், இங்கெல்லாம், அவர்களை வழிநடத்தும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆயரும் தங்களது மறைமாவட்டத்தின் கீழ் உள்ள, மேற்குறிப்பிட்ட தனித்து வாழும் பெண்களுக்காக சட்டங்களை வகுத்து, நெறிப்படுத்த வேண்டும் என்று ஆயர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

### ஆணையங்களும் குழுக்களும்

ஆயர் பேரவையானது, ஆயர்களை இயக்குநர்களாகக் கொண்ட ஆணையங்களாகவும், குழுக்களாகவும் செயல்படுகிறது. இவைகள் மேய்ப்புப்பணியின் பல்வேறு தளங்களில் செயல்படுகின்றன. அவை, ஒப்படைக்கும் அறிக்கைகளின் அடிப்படையில் தான் ஆயர் பேரவை விவாதங்களை மேற்கொள்கிறது. ஆயர் பேரவையின் கீழ் இயங்கும் ஆணையங்களும் குழுக்களும் கீழேத் தரப்படுகின்றன.

**ஆணையங்கள்**

திருவழிப்பாட்டுக்கான ஆணையம், மறைக்கல்விக்கான ஆணையம், குருக்களுக்கான ஆணையம், துறவறத்தாருக்கான ஆணையம், இறையழைத்தலுக்கான ஆணையம், இளைஞர்களுக்கான ஆணையம், விசுவாசக் கோட்பாடுகளுக்கான ஆணையம், கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஆணையம், பொதுநிலையினருக்கான ஆணையம், ஆகியவை ஆயர் பேரவையின் கீழ் வரும் ஆணையங்கள். AKCC, மாதுறு வேதி, குடும்ப நல்வாழ்வு இயக்கம் போன்றவை பொது நிலையினருக்கான ஆணையத்தின் கீழ் செயல்படுகின்றன.

**குழுக்கள்**

பொது விவகாரத்திற்கான குழு, உயர் கல்விக்கான குழு மற்றும் பள்ளிக்கல்விக்கான குழு. இவற்றிற்கு புறம்பாக, பின்வரும் அமைப்புகளும் ஆயர் குழுவின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படுகின்றன.

### 1. திருவழிபாட்டு ஆராய்ச்சி மையம் (Liturgical Research Centre [LRC])

திருவழிபாட்டு சம்மந்தமான ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும், திருச்சபை சார்ந்த நூல்களை வெளியிடுவதற்கும், சபையின் அறிவுசார் மேம்பாட்டிற்கான நிகழ்வுகளை நடத்துவதற்காகவும் இவ்வமைப்பானது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 2. ASSM (Association of the Supporters of the Syro-Malabar Mission) சீரோ மலபார்த் திருத்தொண்டுப்பணி ஆதரவாளர்களுக்கான அமைப்பு

திருத்தொண்டுப்பணிக்கான, ஆளுதவியும் பொருளுதவியும் இவ்வமைப்பானது ஏற்படுத்திக் கொடுக்கிறது. மிஷன் மறைமாவட்டங்களுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டியது தாய்த்திருச்சபையின் கடமையாகும். திருச்சபையின் திருத்தொண்டுப் பணிகளுக்கு அனைவரும் உதவ வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

### 3. இணையதள திருத்தொண்டு

இணையத்தின் மூலமாக வெவ்வேறு மறைமாவட்டங்களை இணைக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. நம்முடைய பணிகளை திறன்மிக்கதாக்க இச்சேவை மிக அவசியம்.


புனித
கலை மற்றும்
சூசைபுரம், கருங்கல்,
கன்னியாகுமரி
கல்லூரி புதிய கட்டடத் திறப்பு
நாள் : 17.01.2016 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :
இடம் : புனித அல்போன்சா கல்லூரி வளாகம், சூசைபுரம், கருங்கல்.
சிறப்பு விருந்தினர்கள்
மார் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி
(உயர் பேராயர், அனைத்துலக சீரோ மலபார் கத்தோலிக்கத் திருச்சபை
மார் ஜோசப் பெருந்தோட்டம்
(பேராயர், சங்கனாச்சேரி உயர் மறை மாவட்டம்)
மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
(ஆயர், தக்கலை மறைமாவட்டம்)
மாண்புமிகு C.T. செல்வம்
(உயர் நீதிமன்ற நீதிபதி, சென்னை உயர் நீதிமன்றம்)



மபோன்சா
றிவியல் கல்லூரி
ல், கருங்கல் அஞ்சல்
ட்டம், தமிழ்நாடு - 629 157
WISDOM ✶ TRUTH ✶ LOYALTY
ST.ALPHONSA COLLEGE
விழா மற்றும் அர்ச்சிப்பு விழா
மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியூஸ்
(கோட்டார் மறைமாவட்டம்)
மேதகு ஆயர் ஜெறோம்தாஸ் வறுவேல் SDB
(குழித்துறை மறைமாவட்டம்)
பேரருட்திரு அறிவர். தேவகடாட்சம்
(கன்னியாகுமரி C.S.I மறைமாவட்டப் பேராயர்)
முனைவர். H. தேவராஜ்
(UGC Vice-Chairman New Delhi)
முனைவர். A. ஜாண் டீ பிரிட்டோ (பதிவாளர்)
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி)
திரு. தளவாய் சுந்தரம் (முன்னாள் அமைச்சர்)
விற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
இவண், கல்லூரி நிர்வாகம்.

ஆகஸ்ட் 29 ஆம் தேதி மதியத்துடன் ஆயர் பேரவையின் 23 ஆவது அமர்வு முடிவுக்கு வந்தது. பேரவையின் வெற்றிக்காக உழைத்த மற்றும் செபித்த அனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**+ ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி**

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர்

காக்கனாடு மவுண்ட செண்ட் தோமஸில் செயல்படும், சீரோ மலபார்த் திருச்சபையின் தலைமைச் செயலகத்திலிருந்து டிசம்பர் 01, 2015 அன்று வழங்கப்பட்டது.

---

## BIRTHDAYS AND FEASTDAYS OF REV. FATHERS

| | |
|---|---|
| Rev. Fr. CHACKO BASIL CMI | January 17 |
| Rev. Fr. LUKA KOLLAMPARAMPIL CMI | January 17 |
| Rev. Fr. SAJI ELAMBASSERIL SDB | January 17 |
| Rev. Fr. KURIAN PANTHICHIRACKAL | January 20 |
| Rev. Fr. ANTONY CHUNDELIKKATTU | January 24 |
| Rev. Fr. GEO CHOOZHIKKUNNEL | January 26 |
| Rev. Fr. JOSEPH MANGALAMADATHIL | January 26 |

**FEASTDAYS**

| | |
|---|---|
| Rev. Fr. KURIAKOSE ARACKAPARAMPIL | January 03 |
| Rev. Fr. KURIAN PANTHICHIRACKAL | January 03 |
| Rev. Fr. SEBASTIAN PUTHENPURAYIL | January 20 |
| Rev. Fr. ROBIN KOORUMULLIL | January 20 |
| Rev. Fr. DAVIS KARUKAPPALLY CMI | January 20 |
| Rev. Fr. JUSTIN CHARUVELIL | January 20 |

# நற்செய்தி நிலையம்

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்." (மாற்கு 16:15)

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

**கிறிஸ்மஸ் விழா கூடுகை**

2015 டிசம்பர் 12 சனிக்கிழமை அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நற்செய்தி நிலையத்தில் வைத்து கிறிஸ்மஸ் விழா, குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. இக்கூடுகையின் போது விவிலியக் கலைவிழா போட்டிகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் பெயர் விபரம் அனைத்தும் மறைவட்ட செயலர்களுக்கு வழங்கப்பட்டது. இயக்குநர் அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் பரிசாக Diary வழங்கினார். இக்கூடுகையில், மறைவட்ட செயலர்கள், ஊக்குவிப்பாளர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டார்கள். ஊக்குவிப்பாளர் திரு. எட்வின்சன் அவர்களின் நன்றியுரையுடன் கிறிஸ்மஸ் விழா இனிதே முடிவுற்றது.

**விவிலியக் கலைவிழா மறைவட்ட போட்டிகள்**

2015-2016-ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா மறைவட்ட போட்டிகள் டிசம்பர் 26 சனிக்கிழமை ஆறுகாணி மற்றும் படந்தாலுமூடு மறைவட்டங்களுக்கும், 29 செவ்வாய்கிழமை மஞ்சாலுமூடு மறைவட்டத்திற்கும், 30 புதன்கிழமை தக்கலை-பிலாங்காலை மறைவட்டத்திற்கும் 31 வியாழக்கிழமை நித்திரவிளை மறைவட்டத்திற்கும் ஜனவரி 3 ஞாயிற்றுக்கிழமை சூசைபுரம் மறைவட்டத்திற்கும் நடத்தப்பட்டன. போட்டிகள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.00 மணி வரை 4 அரங்குகளில் நடைபெற்றன. நிறைவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு ஒத்துழைத்த மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அருட்தந்தை சிஜூ புத்தன்புரையில், அருட்தந்தை ஜேக்கப் ஐயமாத்திர, அருட்தந்தை ஷோஜோ

இருபத்தஞ்சில்சிற, அருட்தந்தை செபி மணிமலக்கண்டத்தில், அருட்தந்தை றோபின் கூருமுள்ளில், அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் மற்றும் மறைவட்ட செயலர்கள் அருட்சகோதரிகள், அனிதா, தீபா, மேரி ஆன், அனு, ஜெய்சி, அல்போன்சா ஆகியோர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெருவித்துக் கொள்கிறேன்.

மறைவட்ட விவிலியக் கலைவிழா போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்கள் பின்வருமாறு.

**ஆறுகாணி மறைவட்டம்**

I-திருக்குடும்ப மறைக்கல்வி நிலையம், ஆறுகாணி 159 புள்ளிகள்

II-புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், நெட்டா 108 புள்ளிகள்

III-புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், பத்துகாணி 83 புள்ளிகள்

**மஞ்சாலுமூடு மறைவட்டம்**

I- புனித குழந்தை தெரசாள் மறைக்கல்வி நிலையம், மஞ்சாலுமூடு 112 புள்ளிகள்

II- புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், முழுக்கோடு 77 புள்ளிகள்

III- திருக்குடும்ப மறைக்கல்வி நிலையம், முக்கூட்டுக்கல் 69 புள்ளிகள்

**நித்திரவிளை மறைவட்டம்**

I-புனித அந்தோணியார் மறைக்கல்வி நிலையம், வயலின்கரை 139 புள்ளிகள்

II - ஜெய மாதா மறைக்கல்வி நிலையம், நித்திரவிளை 118 புள்ளிகள்

III - அமலா மரியா மறைக்கல்வி நிலையம், சீனிவிளை 68 புள்ளிகள்

**படந்தாலுமூடு மறைவட்டம்**

I - புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், பளுகல் 92 புள்ளிகள்

II - திரு இருதய மறைக்கல்வி நிலையம், படந்தாலுமூடு

79 புள்ளிகள்

III - புனித பவுல் மறைக்கல்வி நிலையம், தெற்றியோடு 72 புள்ளிகள்

**தக்கலை - பிலாங்காலை மறைவட்டம்**

I - புனித மிக்கேல் மறைக்கல்வி நிலையம், காட்டாத்துறை 94 புள்ளிகள்

II - புனித அல்போன்சா மறைக்கல்வி நிலையம், நாகர்கோவில் 91 புள்ளிகள்

III - புனித சவேரியார் மறைக்கல்வி நிலையம், கைசாலவிளை 57 புள்ளிகள்

**சூசைபுரம் மறைவட்டம்**

I - தேவமாதா மறைக்கல்வி நிலையம், கிள்ளியூர் 117 புள்ளிகள்

II - புனித யாகப்பர் மறைக்கல்வி நிலையம், மாங்கரை 93 புள்ளிகள்

III - கிறிஸ்து அரசர் மறைக்கல்வி நிலையம், 91 புள்ளிகள்

**தகவல்கள்**

2015-2016 விவிலியக் கலைவிழா மறைமாவட்ட போட்டிகள் ஜனவரி 15 வெள்ளிக்கிழமை அன்று படந்தாலுமூடு மறைவட்ட ஆலய அரங்கில் நடைபெறும். மறைவட்ட போட்டிகளில் முதலிடம், இரண்டாவது இடம் மற்றும் நாடகம் முதலிடம் பெற்ற மாணவ மாணவியர்கள் கலந்துக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான போட்டிகள் மறைவட்ட அளவில் ஜனவரி 26 செவ்வாய்க்கிழமை அன்று படந்தாலுமூடு மறைவட்ட ஆலய வளாகத்தில் வைத்து காலையில் ஆறுகாணி, சூசைபுரம், தக்கலை, பிலாங்காலை ஆகிய மறைவட்டங்களுக்கும் மதியம் 12.30 மணிக்கு மறைமாவட்ட அளவில் ஆசிரியர்களுக்கான விவிலிய வினாடி வினாப் போட்டியும், 1.00 மணிக்கு மஞ்சாலுமூடு படந்தாலுமூடு, நித்திரவிளை ஆகிய மறைவட்ட ஆசிரியர்களுக்கான போட்டியும் நடைபெறும்.

அருட்தந்தை **ஜஸ்டின் செறுவேலில்**
இயக்குநர்.

# குழந்தை ஈசோ இயக்கம்

அனைவருக்கும் குழந்தை ஈசோ இயக்கத்தின் சார்பாக கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

குழந்தாய் நீ செய்வது அனைத்தையும் பணிவோடு செய்; அவ்வாறாயின் கடவுளுக்கு உகந்தோர் உனக்கு அன்பு காட்டுவர்.

சீராக். 3:17

**குழந்தைகளுக்கானச் சிறப்பு தியானம்**

குழந்தைகள் விசுவாச வாழ்வில் வளர்ந்திட வேண்டும், விண்ணக வாழ்வை சொந்தமாக்கிட வேண்டும்! என்னும் நோக்கத்தோடு குழந்தை ஈசோ இயக்கத்தின் சார்பாக இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடம் அவர்கள் தலைமையில் 06.12.2015, 07.12.2015 ஆகிய இரண்டு நாட்களும் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் குழந்தைகளுக்கானச் சிறப்புத் தியானம் நடைபெற்றது. இத்தியானத்தில் சுமார் 1500-க்கும் மேற்பட்ட குழந்தைகள் அணிசேர்ந்து, இறைபாதம் அமர்ந்து, கனிவோடு பகிர்ந்திடும் உரை கேட்டு, துணிவோடு தூயவர் நாமம் பறைசாற்றிடவும், தரணியில் நெறிதவறாமல் வாழவும் பயிற்சி பெற்றனர்.



**தொடக்கவிழா**

உலகின் ஒளி, உயிரை தந்த ஒளி, உடலை உணவாகத் தந்த ஒளி, உன்னத ஒளி, மீட்பின் ஒளி.

இத்தியானத்தை குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், இளைஞர் இயக்க இயக்குநர் அருட்தந்தை

பெலிக்ஸ், குழந்தை ஈசோ இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடம், அருட்சகோதரி றோசிட் FCC, குழந்தைகளின் சார்பாக ஒரு குழந்தை ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர். தொடர்ந்து நடனமும் இடம்பெற்றது.

**ஆயரின் அறிவுரை**

நல்லாயனின் அறிவுரை, நன்னெறியில் வாழ்ந்து
நம்பிக்கை துளிர்விட துணை செய்கிறது.
நல்வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

நமது ஆயர், குழந்தைகளுக்கு இறையழைத்தலைப் பற்றியும், குழந்தைகள் கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ வேண்டும் என்றும் கூறினார். நாம் குழந்தையாக இருக்கும்போதே இறைவனை அன்பு செய்பவர்களாக இருக்க வேண்டும், குழந்தை தெரசா சிறுவயதிலேயே பெற்றோரின் அறிவுரையை ஏற்று கடவுளை அன்பு செய்பவராக வாழ்ந்தார். ஆண்டவர் இயேசு நம்மை நற்செய்திப் பணியாற்றுபவர்களாக அழைக்கிறார். நாம் நம்முடைய பெற்றோர், சகோதரர்களை விட இயேசுவை அன்பு செய்ய வேண்டும் என்றும், குழந்தைகளிடம் மிகவும் அன்பாகப் பேசி நல்ல அறிவுரைகளை குழந்தைகளுக்கு வழங்கினார்.

**ஆயருடன் திருப்பலி**

திருப்பலியை முதல்நாள், ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களும் இரண்டாம் நாள் அருட்தந்தை ஷோஜோ இருபத்தைந்தில்சிற அவர்களும் ஒப்புக் கொடுத்தார்கள்.

**ஒப்புரவு அருட்கொடை**

மழலைகள் உள்ளம் புனிதமாகிட மறுவாழ்வு பெற்றிட அருட்தந்தையர்கள் குழந்தைகளுக்கு ஒப்புரவு வழங்கினார்கள்.

**நற்கருணை ஆராதனை**

நற்கருணையில் எழுந்தருளிவரும் ஈசோவை குழந்தைகள் உள்ளத்திலும் எழுந்தருளிட, குழந்தைகளுக்குச் சிறப்பாக நற்கருணை ஆராதனை நடைபெற்றது.

**வகுப்புகள்**

வன்முறை பன்முறை நடந்துவிட்டது.

எம்முறை கடைபிடித்தால் நாளை

நன்முறையில் மாணவர்களை உருவாக்கிட முடியும். என்ற நோக்கத்தோடு, ‘பரலோகம்’, ‘நல்ல வாழ்க்கை’, ‘குழந்தைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிதல்’ போன்ற தலைப்புகளில் மிகவும் சிறப்பாக பல்வேறு வகுப்புகள் நடத்தப்பட்டன.

**மாயவித்தை (Magic Show)**

வித்தைகளும், விளையாட்டுகளும் என்றால் குழந்தைகளுக்கு அளவில்லா மகிழ்ச்சி. குழந்தைகளை உற்சாகப்படுத்தும் விதமாக கண்ணைக்கவரும் வித்தைகள் காண்பிக்கப்பட்டன.

**சைகைப் பாடல்கள்**

சின்ன சின்ன கைகளுமாய், சின்ன சின்ன கால்களுமாய் குட்டி குட்டி மெய்ப்பாடுகளுமாய் குழந்தைகளின் குதூகலங்கள் நடனங்களாய் இத்தியானத்தில் இடம் பெற்றன. குழந்தைகளின் மகிழ்ச்சி இறை நாமம் புகழ்ச்சி.

**கண்காட்சி**

துறவற வாழ்வின் தொடக்கம், துறவற வாழ்வின் செயல்பாடுகள், துறவற வாழ்வின் சேவைகள், துறவு வாழ்வோரின் தியாகங்கள் ஆகியனக்குறித்து குழந்தைகளின் உள்ளத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அருட்சகோதரிகளின் அரிய படைப்புகளாய்க் கண்ணைக் கவரும் கண்காட்சியும் இத்தியானத்தில் இடம் பெற்றது.

**கைவைத்து வேண்டுதல் செபம்**

“இறையடியார்களின் ஆசீர்

இறைமக்கள் வாழ்வை வளமாக்கும்.”

நமது அருட்தந்தையர்கள் தியானத்தில் கலந்து கொண்ட அனைத்து குழந்தைகளின் தலையிலும் கைவைத்து செபித்து ஆசீர் வழங்கினர்.

**இறுதி ஆசீர்**

இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடம் அவர்களின் இறுதி ஆசீருடன் தியானம் இனிதே நிறைவடைந்தது.

**நன்றி**

நற்செய்தி என்னும் நல்வார்த்தைகளை குழந்தைகள் இதயத்தில் விதைத்த அனைவருக்கும் இதயம் நிறைந்த நன்றி.

குழந்தைகளுக்கானச் சிறப்பு தியானத்தை நடத்துவதற்கு ஒத்துழைப்பு தந்த ஆயர் அவர்களுக்கும், மிகவும் நுண்ணறிவுடன் திட்டமிட்டு வழிநடத்திக் கொண்டிருக்கும் இயக்குநர் அவர்களுக்கும், அனைத்து அருட்தந்தையர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும், ஆனிமேட்டர்ஸ் மற்றும் பொறுப்பாளர்களுக்கும், பெற்றோர்களுக்கும் குழந்தை ஈசோ இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நடைபெறும் நிகழ்வுகள்**

| | |
|---|---|
| டிசம்பர் 28 | ஒவ்வொரு பங்கிலும் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட வேண்டும். |
| ஜனவரி 9 | குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்ட கிறிஸ்மஸ் கார்டு கவர் ஜனவரி 9-க்குள் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். |
| ஜனவரி 16 | குலுக்கல் நடைபெறும். |
| | இன்னும் Statitics form தராதவர்கள் அலுவலகத்தில் உடனே ஒப்படைக்க வேண்டும். |

இவண்,

சகோ. **ஹேமா**, செயலர்.

---

**Pope Francis**

**TWEETS**



**Pope Francis** @Pontifex 26 Dec 2015
Let us pray for Christians suffering persecution, often amid the shameful silence of so many.

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

## இளையோர் கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சி

தக்கலை இளையோர் இயக்கத்தில் கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சி 20.12.2015 அன்று மதியம் 2 மணியளவில் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில், ஆயர் மார் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் "மெர்ஸி கிறிஸ்மஸ்" என்ற சிந்தனையில் நடைபெற்றது. இந்த சிந்தனையில் ஆயர் அவர்கள் சிறப்பு செய்தியளித்தார். சீனிவிளை, இளைஞர்கள் இறைவணக்கப் பாடல் பாடினார்கள். இளைஞர் இயக்கத் தலைவர் செல்வன். அபிஷ வரவேற்புரை கூறினார். தொடர்ந்து ஆயர் அவர்கள் கேக் வெட்டி, கிறிஸ்து பிறப்புச் செய்தியை பகிர்ந்து கொண்டார்கள். பின்பு கிறிஸ்மஸ் பாடல் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் நித்திரவிளை மறைவட்டம் முதலிடத்தையும், மஞ்சாலுமூடு மறைவட்டம் இரண்டாம் இடத்தையும், படந்தாலுமூடு மறைவட்டம் மூன்றாம் இடத்தையும்



பிடித்தார்கள். பின்பு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அருட்சகோதரிகள் மற்றும் இளைஞர் இயக்க உறுப்பினர்கள் 178 பேர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தை தக்கலை இளைஞர் இயக்கத்தின் இயக்குநர் தந்தை பெலிக்ஸ் அவர்கள் வழிநடத்தினார். அனைவருக்கும் கேக் வழங்கப்பட்டது. இரக்கத்தின் ஆண்டிற்கான வாழ்த்து அட்டையும் வழங்கப்பட்டது. சிறப்பு செயல்பாடுகளை கொண்ட இந்நிகழ்ச்சி மாலை 5 மணியளவில் நன்றி பாடலுடன் முடிவுற்றது.

செல்வி **ஷிபி,**
TCYM தன்னார்வத் தொண்டர்.

# புனித வின்சென்ட் தே பவுல் சபை

## பிலாங்காலை வட்டார சபை

**பிலாங்காலை வட்டாரசபையின் 2015-2016ம் ஆண்டிற்கான ஆண்டுவிழாவானது** 08-11-2015 அன்று பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. விழாவின் தொடக்கத்தில் ஆனையடி பங்குத்தந்தை அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் அவர்களால் தியானஉரை நடத்தப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்டுவிழா பொதுக்கூட்டத்திற்கு மத்திய சபைத் தலைவர் சகோ. ஐயாத்துரை மற்றும் அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்கள் அனைவரையும் வட்டாரசபையின் துணைத்தலைவர் சகோ. கிறிஸ்துதாஸ் அவர்கள் வரவேற்றுப் பேசினார். அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் அவர்கள் பேசுகையில், வின்சென்ட் தே பவுல் சபையில் உறுப்பினர்களாக உள்ள நாம் அறப்பணி செய்யவே அழைக்கப்பட்டிருக்கிறோம். அதற்கு பணம், பொருளை விட முக்கியமான ஒன்று நம் உள்ளம் ஆகும். நமது உள்ளம் நன்மை, தீமை எனும் இரு விலங்குகளை கொண்டதாய் அமைந்துள்ளது. அவற்றில் எதை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்னும் முடிவே நம் அறப்பணிக்கு அடிக்கல்லாக அமையும் என்று கூறினார். மத்தியசபையின் தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள், "இறைவன் பலரிடையே நம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார். அதை நினைத்து நாம் பெருமையடைவோம். வின்செந்தியர்களாகிய நாம் தாழ்ச்சியுடன் சபையில் உள்ளவர்களுக்கும் பிறருக்கும் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்வோம். நாம் ஏழைகளுக்கு ஒதுக்கும் நேரம் கடவுளுக்கு உரியது ஆகும். கடவுள் பணி செய்ய, நமக்கு விட்டுக்கொடுக்கும் மனம் வேண்டும். ஏழைகளிடம் இரக்கம் வர ஏழைகளின் நிலையிலிருந்து, அதாவது எளிமை குணம் கொண்டு நாம் செயல்பட வேண்டும். உடல் உறுப்பு தானங்களை ஊக்கப்படுத்துவோம். வின்செந்தியப் பணி ஆன்மீகமும், பொருளாதாரமும் சேர்ந்தது. ஏழைகள் என்றும் நம்முடன் இருக்கிறார்கள். பார்க்கும் பார்வையிலேயே அவர்களை

கண்டுணர நம்மால் முடியும்" என்றும் கூறினார். இடையிடையே கிளைச்சபையின் சார்பில் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவ்வாண்டுவிழாவிற்கு கிளைச்சபைகளிலிருந்து 39 பேர் கலந்து கொண்டனர். பின்னர் பிலாங்காலை, புனித மேரி கிளைச்சபையின் உறுப்பினர் சகோதரி பபிஷா ஜுலியட் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற, இறுதி ஜெபத்துடன் இனிதே நிறைவடைந்தது.

## கிறிஸ்துமஸ் விழா மற்றும் திட்டத்தொகை வழங்குதல்

**பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் பெண்கள் கிளைச்சபையின்** கிறிஸ்மஸ் விழா 24.12.2015 வியாழன் மாலை 6 மணியளவில் அருட்தந்தை தோமஸ் போக்குவரேத்து தலைமையில் நடைபெற்றது. கிளைச்சபை உறுப்பினர்களும், தத்துக்குடும்ப உறுப்பினர்களும் வருகை தந்திருந்த இக்கூட்டத்தில் அருட்தந்தை கிறிஸ்மஸ் செய்தி வழங்கி கேக் வெட்டினார். பின்னர் 500 ரூபாய் வீதம் 5 தத்துக்குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது. கிளைச்சபை செயலாளர் அமலமேரி அனைவருக்கும் நன்றி கூற இறுதி செபத்துடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

**பரைக்கோடு கிறிஸ்து அரசர் பெண்கள் கிளைச்சபையில்** 23-12-2015 அன்று மாலை சுமார் 6.15 மணியளவில் கிளைச்சபையின் கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. அதில் காட்டாத்துறைப் பங்குத்தந்தை ஷெபி மற்றும் மத்தியசபை மகளிர் பிரதிநிதி செல்வி அமலாமேரியும் வருகைதந்திருந்தனர். இக்கூட்டத்தில் கிளைச்சபை உறுப்பினர்களும் தத்துக்குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அருட்தந்தை அவர்கள் கேக் வெட்டி கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார். பின் தத்துக் குடும்பங்களுக்கு ரூ.3,564 மதிப்பிலான உணவுப் பொருட்கள் துணி மற்றும் பணமும் கொடுக்கப்பட்டது. அத்துடன் தந்தையவர்களால் 12 பயனாளிகளுக்கு 1,20,000 ரூபாய் திட்டத்தொகை கடனுதவியாக வழங்கப்பட்டது. இறுதியில் பொருளாளர் சகோ. மெரின் தேவிகா அனைவருக்கும் நன்றி கூற, கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் பெண்கள் கிளைச்சபையின்** சார்பாக 27-09-2015 அன்று புனித வின்சென்ட் தே பவுல் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று திருப்பலி ஒப்புக் கொடுத்து வின்செந்தியர்கள் அனைவரும் நற்கருணை விருந்தில் பங்கு கொண்டனர். காணிக்கைப் பவனியிலும் கலந்து கொண்டனர். தொடர்ந்து வின்செந்தியர்கள் அனைவரும், தத்தம் வாக்குறுதிகளைப் புதுப்பித்துக் கொண்டனர்.

பின்னர் வீடு சந்தித்து நோயாளிகளுக்காக செபித்து அவர்களுக்கு ஆறுதல் கூறினர். கிட்னி பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி ஒருவருக்கு ரூபாய் 5,000 உதவி செய்யப்பட்டது.

## நித்திரவிளை வட்டார சபை

நித்திரவிளை வட்டார சபையின் மாதக் கூட்டத்தோடு கிறிஸ்துமஸ் விழாவும் 13.12.2015 அன்று 3 மணியளவில் நித்திரவிளை ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தில் நடைபெற்றது. அனைத்து உறுப்பினர்களும் ஆலயத்தில் ஒன்றுகூடி செபித்து, பின் தொடக்க செபத்துடன் கூட்டம் ஆரம்பமானது. வட்டாரசபைத் தலைவர் வின்சென்ட் ராஜ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செயலர் அறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினர் அருட்சகோதரர் ஜஸ்டின் சுதீஷ் அவர்கள் கலந்து கொண்டு கிறிஸ்துமஸ் கேக் வெட்டி கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்.

வாழ்க்கையை திருமணம் மற்றும் மொய் எழுதும் நிகழ்வுக்கு ஒப்பிட்டு, உன் வாழ்க்கையில் நீ உனக்கென்று என்ன மொய் எழுதி வைத்துள்ளாய் என்ற சிந்தனையைத் தூண்டி, கிறிஸ்துவை பிறருக்குக் கொடுக்கும் நல்லுள்ளம் படைத்தவர்களாக நாம் மாற வேண்டும் என்று வாழ்த்துச் செய்தி கூறினார். பின்னர் தலைவர் அவர்கள் இரக்கத்தின் ஆண்டில் வின்செந்தியர்களாகிய நாம் என்னென்ன இரக்கச் செயல்கள் செய்யலாம் என்பது பற்றியும் கூற, இறுதி செபத்துடனும், இனிய தேனீர் விருந்துடனும் கிறிஸ்துமஸ் விழா கூட்டம் நிறைவு பெற்றது.

### திட்ட உதவி வழங்குதல்

நித்திரவிளை ஜெயமாதா மற்றும் லிட்டில்பிளவர் கிளைசபை சார்பில் 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு

பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ் தலைமையில் வட்டார சபைத்தலைவர் வின்சென்ட் ராஜ் அவர்கள் முன்னிலையில் திட்ட உதவி வழங்கப்பட்டது. எட்டு நபர்களுக்கு ஜெயமாதா கிளைச்சபை சார்பில் ரூபாய் 80,000மும், ஏழு நபர்களுக்கு லிட்டில் பிளவர் பெண்கள் கிளைச்சபை சார்பில் ரூபாய் 35,000மும் கடனுதவி வழங்கப்பட்டது.

**சபை நிறுவனர் திருவிழா**

**பென்கிரி, புனித பெனடிக்ட் கிளைச்சபையில்** 27.09.2015 அன்று புனித வின்சென்ட் தே பவுல் மற்றும் பிரடரிக் ஓசானாம் ஆகியோரின் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. காலை 6.40 மணிக்கு காலை செபத்துடன் ஆரம்பமாகி அருட்தந்தை டோம் குந்நும்புறம் அவர்கள் தலைமையில் திருப்பலி நடந்தது. திருப்பலியின் போது மறையுரையில் வின்செந்தியப் பணி என்பது ஒரு பிறரன்புப் பணி என்றும் இந்தப் பணியில் இன்னும் அதிகமான உறுப்பினர்கள் ஈடுபட வேண்டும் எனவும் கூறினார். அன்றைய தினம் வின்செந்தியர்கள் அனைவரும் திருப்பலியில் கலந்து கொண்டனர். திருப்பலி முடிந்தவுடன் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. திருவிழாவை முன்னிட்டு மஞ்சாலுமுடு A.C. சார்பில் மாலை 3 மணிக்கு முன்சிறை அன்பகம் சந்திப்பு நடந்தது. இதில் புனித பெனடிக்ட் கிளைச் சபை சார்பில் நான்கு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**முக்கூட்டுகல் திருக்குடும்ப ஆலயத்தில்** நிறுவனர் திருவிழாவானது 27.09.2015 அன்று நடைபெற்றது. இதன் தயாரிப்பாக 26.09.2015 அன்று சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணி வரை அன்பு, பரிவு, பிறர் உதவி இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு மணி நேர தியானமும் ஒப்புரவு வழிபாடு, மற்றும் நற்கருணை ஆசீரும் நடைபெற்றது. 27.09.2015. அன்று அனைத்து உறுப்பினர்களும் திருப்பலியில் பங்கேற்று திருவிருந்தில் உட்கொண்டார்கள். விவிலிய வாசகம் உறுப்பினர்களால் வாசிக்கப்பட்டது.

**புதிய வீடு அர்ச்சிப்பு மற்றும் அர்ப்பணம்**

சூசைபுரம் புனித சூசையப்பர் தேவாலயத்தில் செயல்பட்டு வரும் புனித வின்சென்ட் தே பவுல் சபையின் புனித சூசையப்பர்

கிளைச்சபையானது 1963ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8 ம் நாள் காலஞ்சென்ற பேரருட்தந்தை தோமஸ் வீட்டுவேலிக்குந்நேல் அடிகளாரால் தொடங்கப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு சிறப்பாக பணியாற்றி வருகிறது.

இக்கிளைச்சபையின் சார்பில் சூசைபுரத்தை சேர்ந்த, காக்கவிளையில் திருமதி மரியசெல்வி என்ற ஏழைத்தாயின் குடும்பத்திற்கு புதிய வீடு கட்டிகொடுக்க 16.05.15 அன்று நடைபெற்ற கிளைச்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு ஆன்மீக



இயக்குநர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களின் வழிகாட்டுதலின் படி, பங்குமக்கள் மற்றும் பிற மக்களிடமும் ரூ 3,00,000 புதிய வீடு கட்ட நன்கொடை பெறப்பட்டது. 20.08.15 அன்று பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் செபித்து தொடங்கிவைத்த இக்கட்டுமானப்பணி 18.11.2015 அன்று நிறைவுபெற்றது. பின்னர் 18.11.15 அன்று இவ்வில்லத்தை பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் அர்ச்சித்து வைத்தார்கள். இந்நிகழ்விற்கு கிளைச்சபை உறுப்பினர்கள் மத்தியசபை தலைவர் சகோ. ஐயாத்துரை, வட்டாரசபைத் தலைவர் சகோ. சோனிக் ரீகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவண்,

சகோ. சுரேஷ்குமார், செய்தி தொடர்பாளர்

# Mission Sunday Collections 2015

| Sl.No | Place | Church Name | Amount |
|---|---|---|---|
| | | | |
| 1 | Anjugramam | St. Thomas | 10510 |
| 2 | Anamughom | Loretto Matha | 1360 |
| 3 | Anayadi | St. George | 2000 |
| 4 | Annikkarai | St. Mathew's | |
| 5 | Arukani | Holy Family | 6,960.00 |
| 6 | Athencode | St. Maria Goretti | 3,235.00 |
| 7 | Bengri | St. Benadict's | 3,000.00 |
| 8 | Cheenivilai | Amala Maria | 1,945.00 |
| 9 | Chenamcode | Lourdu Matha Mission | 1,500.00 |
| 10 | Chiristurajapuram | Christ the King | 3,000.00 |
| 11 | Kaisalavilai | St. Xavier's | 7,000.00 |
| 12 | Kaliyal | St. Mary's | 10000 |
| 13 | Karode | St. Joseph's | 3061 |
| 14 | Kattathurai | St. Michael's | 4,030.00 |
| 15 | Kalluvilai | Bld. Mother Theresa | 1200 |
| 16 | Kazhuvanthittai | St. Martin de Porres | 1500 |
| 17 | Killiyoor | Deva Matha | 5410 |
| 18 | Kulasekaram | St. Joseph's | 2000 |
| 19 | Malaicode | Holy Cross | 16601 |
| 20 | Manjalumoodu | Little Flower | 30000 |
| 21 | Mankarai | St. James | 4700 |
| 22 | Marappady | St. Thomas | 5000 |
| 23 | Marthandam | St. Vincent de Paul | 2290 |
| 24 | Mathapuram | St. Thomas | 1300 |
| 25 | Mezhacode | St. Francies Assisi | 10100 |
| 26 | Mekkarai | St. George Mission | 10500 |
| 27 | Muzhucode | St. Thomas | 14690 |
| 28 | Mukkoottukal | Holy Family | 15500 |
| 29 | Munchirai | St. George | 9000 |
| 30 | Nagercoil | St. Alphonsa | 25000 |
| 31 | Netta | St. Thomas | 5500 |
| 32 | Nithravilai | Jeyamatha | 8000 |
| 33 | Padanthalumoodu | Sacred Heart | 23000 |
| 34 | Palappallam | Christ the King | 3000 |
| 35 | Pallikonam | Sacred Heart | 4475 |
| 36 | Palugal | St. Thomas | 17000 |
| 37 | Paraicode | Christ the King | 3055 |
| 38 | Pathukani | St. Thomas | 2000 |

| | | | |
|---|---|---|---|
| 39 | Penu | St. Mary's | 1265 |
| 40 | Perunchilampu | St. Thomas Mission | 2200 |
| 41 | Pilankalai | Little Flower | 9000 |
| 42 | Pilankarai | Loretto Matha | 2890 |
| 43 | Pudur | St.Thomas | 1500 |
| 44 | Puliyarai | Little Flower | 13105 |
| 45 | Soosaipuram | St. Joseph's | 8480 |
| 46 | Thackalivilai | Holy Family | 3500 |
| 47 | Thadickarankonam | St. Joseph's | 7750 |
| 48 | Thettiyode | St. Paul's | 2935 |
| 49 | Thettivilai | St. Michael's | |
| 50 | Thuckalay | St. Mary's | 500 |
| 51 | Varuthattu | St. Xavier's | 2420 |
| 52 | Vayalinkarai | St. Antony's | 7000 |
| 53 | Valan Nagar | St. Joseph's | 4050 |
| | | | |
| | Carmel Jothi School | Pilankarai | 11000 |
| | | | |
| | | **Total** | 3,59,517 |

Fr. **Mathew Mulangasseril**,
Finance Officer.

## செங்கோட்டை வட்டாரச் செய்திகள்

### கிறிஸ்து பிறப்பு விழா

2015 டிசம்பர் 22ம் தேதி செங்கோட்டை திருத்தொண்டு நிலையங்களின் சார்பில் கிறிஸ்து பிறப்பு விழா ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. ஆயர் அவர்கள் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி செய்தி வழங்கினார்கள். திருத்தொண்டு நிலையத்துக்குட்பட்ட அனைத்து அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் கலந்து கொண்டனர். நிகழ்வை அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

### மதுபகா அர்ச்சிப்பு விழா

மேக்கரை தூய ஜார்ஜியார் ஆலயத்தின் மதுபகா அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்கள் தலைமையில் புதுப்பிக்கப்பட்டு, அதன் பணிகள் நிறைவு பெற்றது. இதன் அர்ச்சிப்பு விழா 22.12.2015 செவ்வாய்கிழமை ஆயர் தலைமையில் நடைபெற்றது. செங்கோட்டையில் செயல்படும் அனைத்து ஆலயங்களிலிருந்தும் மக்கள் கலந்துகொண்டனர்.

**புதிய மாலைநேர வகுப்புக்கள்**

புளியரையிலிருந்து சுமார் 2 கி.மி தொலைவில் தெக்குமேடு என்னுமிடத்தில் புதிய மாலைநேர வகுப்புகள் தொடங்கப்பட்டன. தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகின்றது செங்கோட்டை வட்டார அனைத்து செயல்பாடுகளுக்காகவும் வளர்ச்சிக்காகவும் செபியுங்கள்.

இவண்,
பேரருட்தந்தை பீட்டர் கிழக்கேல்,
ஒருங்கிணைப்பாளர்.

---

## அருட்சகோதரர்களிடமிருந்து . . .

அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா நல்வாழ்த்துக்கள்!

திருத்தொண்டர் நிலையிலிருந்து அருட்தந்தையாக உயர்த்தப்பட்ட அருட்தந்தை றிட்டோ அவர்களுக்கு எங்களது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவிப்பதோடு, அவருக்காக செபித்த, தொடர்ந்து செபிக்கின்ற இறைமக்கள் யாவருக்கும் மனமார்ந்த நன்றியினையும் தெரிவிக்கின்றோம்.

விடுமுறைக்காக வருகை தந்த உயர்குருமட மாணவர்களும் (உஜ்ஜயின் தவிர) கிறிஸ்துபிறப்பு விழா காண அனைவரும் 23.12.2015 மாலையில் சங்கமத்தில் வந்து 24.12.2015 காலையில் ஆயரோடு திருப்பலி நிறைவேற்றி, சிற்றுண்டி அருந்தி, அவரவர் குருத்துவக் கல்லூரிகளின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இறுதியில் ஆயர் அவர்களால் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் செய்தியும், அறிவுரையும் மற்றும் சிறப்புப் பரிசும் வழங்கப்பட்டது. சங்கமத்தில் அனைத்து தயாரிப்புகளையும் நடத்தி, எங்களை வரவேற்ற அருட்தந்தை ஜோண்சிலால் அவர்களுக்கு நன்றி. இறையியல் கல்லூரியில் பயிலும் சகோதரர்கள் இவ்வருடம் கிறிஸ்துமஸ் திருப்பலிக்காக சொந்த பங்குகளுக்குச் சென்றனர்.

28.12.2015 அன்று குருத்துவ பட்டமேற்பு விழாவிற்கு அனைத்து உயர் குருத்துவ கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு அவருக்காக ஜெபித்தனர்.

திருத்தொண்டர்கள் நான்கு பேரும் நல்லமுறையில் செயல்படுவதாக அந்தந்த இடங்களிலுள்ள அருட்தந்தையர்கள் மகிழ்கின்றனர். தற்போது அவர்களோடு சேர்ந்து படிக்கும் திருத்தொண்டர்களின் குருத்துவ அருட்பொழிவு விழாவில் பங்குகொண்டு செபித்து வருகின்றனர்.

தற்போது திருத்தொண்டர்களின் வரிசையில் Bro. ஜாண் ஜோசப் காரோடு அவர்களும் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் சாத்னா மறைமாவட்ட மேதகு ஆயர் ஜோசப் கொடகல்லில் அவர்களால் 20.12.2015 அன்று திருநிலைப்படுத்தப்பட்டார். ஆயர் அவர்கள் 17.12.2015 அன்று தூய தோமையார் குருத்துவக்கல்லூரி வடவாதூருக்கு சென்று திருப்பலி நிறைவேற்றி, அர்ப்பண வாழ்வாண்டினை நிறைவு செய்து செய்தி வழங்கினார். மேலும் அங்கு பயிலும் நம் அருட்சகோதரர்களை சந்தித்து, கிறிஸ்து பிறப்பு விழாவினையும் கொண்டாடினார்.

விடுமுறையின்மையால் உஜ்ஜயின் குருத்துவக் கல்லூரியில் பயிலும் அருட்சகோதரர்களால் வரமுடியவில்லை. அவர்கள் ஆயரை அலைப்பேசியில் தொடர்பு கொண்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களையும் ஆசீரையும் பெற்றனர். கிறிஸ்துமஸ் விழாவினை முன்னிட்டு நடைபெறும் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கும் நாடகத்தில் சகோ. சஜின் தேவ் கலந்துக்கொண்டு, நடனம் ஆடி யாவரையும் மகிழ்வித்தார். சகோ. அஜின் .D மற்றும் அஜின் C, குருத்துவக் கல்லூரியில் கிறிஸ்துமஸ் குடில் அமைக்கும் குழுவில் இணைந்து இயன்றவரை உதவினர். மேலும் அவர்களுடைய வகுப்புகள் 28.12.2015 அன்று ஆரம்பமானது.

குருத்துவக் கல்லூரிகளும் விடுமுறை முடிந்து வகுப்புகள் ஆரம்பமாகும் நாட்களும்,

| | | | | |
|---|---|---|---|---|
| கோட்டயம் | - | ஜனவரி 5 | திருச்சூர் - | ஜனவரி 5 |
| வாராங்கல் | - | ஜனவரி 3 | பெங்களூர்- | ஜனவரி 3 |
| குந்நரத் | - | ஜனவரி 5 | சாத்னா - | ஜனவரி 6 |

இறையியல் மற்றும் களப்பணி ஆற்றுகின்ற அருட்சகோதரர்கள் மறைவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளுக்கு மதிப்பீட்டாளராகச் செயல்பட்டனர். வாய்ப்பளித்த மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை ஜஸ்டின் அவர்களுக்கு நன்றி.

இறைமக்கள் அனைவரின் செபங்களின் பலனாக அருட்சகோதரர்கள் மகிழ்ச்சியுடன் என்றும் நிலைக்க உங்கள் செபங்களை வேண்டுகிறோம்.

சகோ. வினு,
அருட்சகோதரர் தலைவர்.

# BISHOP'S ENGAGEMENTS JANUARY 2016

| DATE | Day | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Friday | 12.00pm | Lunch with Mr. Lechner and group |
| | | 5.00 pm | Mr. Barnabas family: Marriage |
| | | 8.00 pm | Meeting in the Bishop's House |
| 2 | Saturday | 10.00 am | Marriage Mass at Trivandrum Loured Matha church |
| 3 | Sunday | 3.00 pm | Changanassery: Marriage Mass at Cathedral church |
| 4 | Monday | | Bishop's House |
| 5 | Tuesday | 3.15 pm | Manimala: Holy Qurbana |
| 6 | Wednesday | | Changanacherry |
| 7 | Thursday | | Synod |
| 8 | Friday | | Synod |
| 9 | Saturday | | Synod |
| 10 | Sunday | | Synod - Chalakudy: Silver Jubilee of Fr. Paulson |
| 11 | Monday | | Synod |
| 12 | Tuesday | | Synod |
| 13 | Wednesday | | Chalakudi |
| 14 | Thursday | | Thalassery |
| 15 | Friday | | Thalassery >> Kottayam |
| 16 | Saturday | 9.15 am | Kanjirapally: Jubilee of Sr. Sophy >> Thuckalay |
| 17 | Sunday | | Inauguration of College |
| 18 | Monday | | Recollection |
| 19 | Tuesday | | Bishop's House >> Madurai |
| 20 | Wednesday | | TNBC |
| 21 | Thursday | | TNBC >> Thuckalay |
| 22 | Friday | | Bishop's House |
| 23 | Saturday | | Seminary: Home day |
| 24 | Sunday | | Visit to Sengottai Mission |
| 25 | Monday | | Arukani: Requiem Mass in Fr. Chundalikkatt's family |
| 26 | Tuesday | | Angamaly: Marriage Mass |
| 27 | Wednesday | 9.30 am | Curia Meeting |
| | | 5.00 pm | Kattathurai: School Annual Day |
| 28 | Thursday | 4.30 pm | Nagercoil: School Annual Day |
| 29 | Friday | 9.00 am | Killiyoor: Marriage Mass |
| | | 4.30 pm | Christurajapuram: School Annual Day |
| 30 | Saturday | 3.30 pm | Thettiyode: Aseer Vidialaya Silver Jubilee |
| | | 5.30 pm | Karode: DNN annual day |
| | | 2.00 pm | Conclusion of Year of Religious |
| 31 | Sunday | 6.30 pm | Bishop's House: Feast of St. John Bosco |

Fr. K. J. Antony SDB
*Diocese Secretary*

இறையருள் செய்திகள் மற்றும் விமர்சனங்களுக்கு
iraiarultkly@gmail.com